2006 ஆகஸ்ட் 7] [கலைஞர் மு. கருணாநிதி]

வன்முறை பதிலாகாது, அதையும் நினைவிலே கொள்ளவேண்டும். எனவே, இந்தக் கிளர்ச்சியில் ஈடுபட்டவர்கள், தங்களுடைய எண்ணத்தை வெளிப்படுத்த, ஒரு அனுதாபத்தை வெளிப்படுத்துவதற்காக நடத்தப்பட்ட ஒரு பேரணி ஊர்வலமே தவிர, வேறல்ல. நிலைமை வேறுமாதிரி திரும்புமேயானால், அதை அரசு வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்காது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமாத்திரமல்ல, இந்தியாவிற்கு விரோதமாகவோ, இந்திய ஒற்றுமைக்கு, இந்திய இறையாண்மைக்கு விரோதமாகவோ யார் செயல்பட்டாலும், அவர்களை இந்த அரசு சும்மா விடாது என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஒன்றை ஞாபகத்திலே வைத்துக்கொள்ள வேண்டும்; விடுதலைப்புலிகளுக்குத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது, தடை விதிக்கப்பட்டிருப்பது சரியா, அல்லவா என்பது விவாதத்திற்கு உரியது என்றாலும்கூட, தடை இருக்கிற வரையில் அதற்கு நாம் அடங்கித்தான் செல்ல வேண்டும். அதை மீறிச் செல்வோம் என்றால், மீறினால் ஏற்படுகின்ற விளைவுகளையும் ஏற்றுத்தான் தீரவேண்டும் என்பதை இங்கே நண்பர் ஞானசேகரனுடைய இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மூலமாக வெளிப்படுத்த விரும்புகின்றேன்.

முற்பகல் 10–25

3. கவன ஈர்ப்பு

திருக்கழுக்குன்றம் பேரூராட்சியில் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. கி. ஆறுமுகம் அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. கி. ஆறுமுகம்.

திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செங்கல்பட்டு தொகுதியிலே உள்ள திருக்கழுக்குன்றம் பேரூராட்சியில் வாரம் ஒருமுறை குடிநீர் வழங்குவதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

[2006 ஆகஸ்ட் 7

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

திருக்கழுக்குன்றம் பேரூராட்சியில் வல்லிபுரம் பாலாறு குடிநீர்த் திட்டத்தின்கீழ் 7.67 இலட்சம் லிட்டரும், உள்ளூர் குடிநீர்த் திட்டத்தின்கீழ் 5.12 இலட்சம் லிட்டர் குடிநீரும், ஆக மொத்தம் 12.79 இலட்சம் லிட்டர் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வந்தது. தற்போது பாலாறு நீர்ப்பிடிப்புப் பகுதியின் மூலம் குடிநீர் விநியோகம் செய்யும் நீர் உறிஞ்சும் கிணறு மற்றும் உறை கிணறு ஆகியவற்றில் நீர் சுரப்பு குறைந்துள்ளதால் மூன்று நாட்களுக்கு ஒருமுறை வல்லிபுரம் பாலாறு குடிநீர்த் திட்டம் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், தினசரி உள்ளூர் குடிநீர்த் திட்டம் மூலம் தினசரி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

2. திருக்கழுக்குன்றம் பேரூராட்சிப் பகுதியில் வழங்கப்படும் குடிநீர் அளவினை கூடுதலாக்கும்பொருட்டு புதிய திட்டம் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் ஆய்வுப் பணி நடைபெற்று வருகிறது.

3. இத்திட்டத்தினால் கூடுதலாக 4.00 இலட்சம் லிட்டர் குடிநீர் கிடைக்கும். இத்திட்டம் நிறைவேற்றப்படும்பட்சத்தில் பொது மக்களுக்குக் குறைவின்றி குடிநீர் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். அதிலே வாரத்திற்கு மூன்று முறை தண்ணீர் கொடுப்பதாகவும், பாலாற்றுப் படுகையிலே இருந்து வருகின்ற நீர், அங்கே நீர் உறிஞ்சும் கிணறு மற்றும் உறை கிணறு ஆகியவற்றில் நீர் சுரப்பு குறைந்துள்ளதால் இந்த நிலை ஏற்படுகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே, கடந்த முறை இந்தச் சட்டமன்றத்தில் இதுகுறித்து, பாலாற்றுப் படுகையிலே மணல் எடுக்கின்ற விதிமுறைகள் மீறப்படுகிறது, 20 அடி, 25 அடி ஆழத்திற்கு மேலாக அரசே நடத்துகின்ற அந்தக் குவாரிகளிலே மணல் அள்ளப்பட்டதையெல்லாம் சொன்னோம். அது கடந்த ஆட்சியிலே கேட்கப்படவில்லை.

அதனால், நீர் குறைந்துள்ளதை அரசே இப்போது அறிவித்திருக்கிறது. இதையெல்லாம் அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டு, எங்களுடைய பகுதியில் இருக்கின்ற குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும். அந்த நகரம் ஏறக்குறைய 50 ஆயிரம் மக்கள் வசிக்கின்ற பேரூராட்சியாகும். நெரிசல் மிகுந்த நகரமாக இருந்துகொண்டிருக்கிறது. குடிநீர் இப்போது வாரத்திற்கு ஒரு முறைதான் பாலாற்றிலிருந்து வழங்கப்பட்டு வந்துகொண்டிருக்கிறது. எஞ்சியிருக்கின்ற தண்ணீர் உள்ளூரில் இருக்கின்ற குழாய் மூலம் ஒருசில நாட்களுக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, நம்முடைய அரசாங்கம், தலைஞர் அவர்கள் தலைமையில் இருக்கின்ற நம்முடைய அரசாங்கம், அதுவும் குறிப்பாக நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர், தளபதி அவர்கள் தலைமையேற்று நடத்திக் கொண்டிருக்கின்ற துறையிலே எங்களுடைய பேரூராட்சிக்கு, தினமும் குடிநீர் பாலாற்றிலிருந்து கிடைப்பதற்கு வழிவகை மேற்கொள்வதற்குப் புதிய திட்டம் தீட்டியிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், அங்கிருக்கிற மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியினுடைய கொள்ளளவு மிகக் குறைவான நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. அதனால், அங்கே மழைக்காலத்தில்கூட, தினமும் தண்ணீர் கொடுக்க முடியாத நிலை இருக்கிறது. எனவே, கூடுதலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை அமைத்தால்தான் அங்கே தினமும் தண்ணீர் கொடுக்கக்கூடிய வாய்ப்பு இருக்கும். அதற்கும் நம்முடைய அரசாங்கம் உடனடியாக கூடுதலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளை அமைக்குமா என்பதையும் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கழுக்குன்றம் பேரூராட்சியினுடைய மக்கள் தொகை 2001 ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி, 23,716 ஆகும். ஆனால், தற்போது மக்கள் தொகை, 27,000 ஆக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. பேரூராட்சிகளில் நபர் ஒருவருக்கு 70 லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கவேண்டுமென்பதுதான் இந்த அரசாங்கத்தினுடைய கொள்கையாகும். இந்தப் பேரூராட்சிக்கு, திருக்கழுக்குன்றம் குடிநீர்த் திட்டம்மூலம், 7.67 இலட்சம் லிட்டர் பாலாற்றிலிருந்து வல்லிபுரம் நீரேற்று நிலையத்தின் மூலம் பெறப்பட்டும், அதேபோல திருக்கழுக்குன்றத்தில் இருக்கக்கூடிய உள்ளூர் குடிநீர்த் திட்டம் மூலமாக 5.12 இலட்சம் லிட்டர் குடிநீர் பெறப்பட்டும், ஆக மொத்தம் 12.79 இலட்சம் லிட்டர் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வந்தது. பாலாற்று நீர்பிடிப்புப் பகுதியில் வல்லிபுரத்திலிருந்து குடிநீர் விநியோகம்

செய்யும் நீர் உறிஞ்சும் கிணறு மற்றும் உறை கிணறு ஆகியவற்றில் நீர் சுரப்பு குறைந்துள்ளதால் வல்லிபுரம் பாலாற்று குடிநீர்த் திட்டம் மூலம் 3 நாட்களுக்கு ஒரு முறைதான் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. உள்ளூர் குடிநீர்த் திட்டத்தின் மூலமாக தினசரி 5.12 இலட்சம் லிட்டர் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது.

மேலும், திருக்கழுக்குன்றத்திலே 120 இந்தியா மார்க்–2 பம்புகள் 37 திறந்தவெளிக் கிணறுகள்மூலம் தற்போது தண்ணீர் எடுத்து, பொதுமக்களால் பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. தற்போது திருக்கழுக்குன்றம் ஏரியில் உள்ள கிணற்றிலிருந்து தினசரி 6 இலட்சம் லிட்டர் தண்ணீர் எடுத்து பேரூராட்சிகளுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல, இப்பேரூராட்சியிலே 21 இடங்களில் 8.4 இலட்சம் ரூபாய் செலவிலே இந்தியா மார்க்–2 ஆழ்குழாய்க் கிணறுகளை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே, இந்த முயற்சி நிறைவேற்றப்படக்கூடிய சூழ்நிலையில் திருக்கழுக்குன்றம் பேரூராட்சியினுடைய குடிநீர்த் தேவை முழுவதும் தீர்க்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கை ஒன்றினை அளிக்க....... (குறுக்கீடு)

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூரில் பாலாற்றின் குறுக்கே அணை கட்டுவது...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த subject–க்கு வந்தாகிவிட்டது. உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) அடுத்த அலுவலுக்கு வந்தாகிவிட்டது. உட்காருங்கள். நீங்கள் உட்காருங்கள்.(குறுக்கீடு) சரி, திரு. தி. வேல்முருகன்.

2. தகவல் கோரல்– தொடர்ச்சி

(ஆ) சட்டமன்ற உறுப்பினர் குடியிருப்பில் மின்தூக்கி அடிக்கடி பழுதாகிவிடுதல்

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசினர் தோட்ட வளாகத்திலே இருக்கிற சட்டப் பேரவை உறுப்பினர்கள் தங்குகின்ற அந்தக் குடியிருப்பு விடுதிகளில், அதுவும்